# #YFORB

# வடிவமைப்பு போட்டி

FULL NAME:THAMILALAGAN DILAKSHINI

AGE GROUP:16-29

DATE OF BIRTH:15.10.1998

EMAIL ADDRESS: dilakshi61015@gmail.com

IDENTITY CARD NUMBER : 987891807V

AGE AS AT 10.09.2021: 22 YEARS 10 MONTHS 25 DAYS

## 01. ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கைப் போன்ற மனிதாபிமான குணங்கள்.

முதலாவதாக ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் எனப்படுவது "தனி நபர்கள் அல்லது சமூகங்கள் எந்த ஒரு சமயம் தொடர்பாகவும், பொதுவிலோ தனிப்பட்ட முறையிலோ, நம்பிக்கைகளை வைத்திருப்பதிற்கும், வழிபடுவதிற்கும், சடங்குகளை நடாத்துவதற்குமான சுதந்திரம்" ஆகும். இலங்கை அரசியலமைப்பில் " ஒருவர் தெரிவு செய்துள்ள மதத்தினை அல்லது மத நம்பிக்கையினை அனுபவிப்பதற்கு அல்லது சுவீகரிப்பதற்குரிய சுதந்திரம் உள்ளிட்ட மதம் சார் சுதந்திரம்,சிந்தனைச் சுதந்திரம் மற்றும் மனசாட்சி என்பவற்றை முழுமையாக அனுபவிக்கும் உரிமையானது ஒவ்வொரு நபருக்கும் உரித்துடையது" என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு அரசியலமைப்பானது அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டிலும் தமது சமயத்தை அல்லது வணக்கமுறை தொடர்பான நம்பிக்கைகள் நடைமுறையில் மேற்கொள்ளுதல், அவதானித்தல் அல்லது போதித்தல் ஆகிய செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்குரிய உரிமைகளைப் பிரஜைகளுக்கு வழங்கியுள்ளது.

அந்தவகையில் மதங்கள் அனைத்துமே அன்பு, கருணை, இரக்கம், சாந்தி, சமாதானம் போன்ற நல்ல உயரிய பண்புகளையே வலியுறுத்துகின்றது. எந்த மதமும் முரண்பாடுகளை விரும்புவதில்லை. நம்மை மேன்மைப்படுத்துவதற்காகவே மதங்கள். வழிபாடுகளால் மதங்கள் வேறுபட்டாலும் அன்பு என்கின்ற ஒற்றைப் புள்ளியில் இணைந்துக் காணப்படுகின்றது. அனைத்து மதங்களும் ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை நெறிப்படுத்தி நேர்மையுடன் வாழ வழிகாட்டுகின்றன. அதாவது மனித குலம் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டுகின்ற கொள்கை, கோட்பாடுகளே சமய தத்துவங்கள் ஆகும். மதங்களின் நோக்கம் மக்களின் மனங்களை அன்பால் ஈர்பதே தவிர அறிவால் தூர்ப்பதே அல்ல. மதம் என்பது மக்கள் இதயத்துக்கு இதயம் அன்பு பயணம் போவதற்கு அமைந்த பாலங்கள். மக்களுக்காக மதங்கள் தோன்றினவே அல்லாமல் மதங்களுக்காக மக்கள் தோன்றவில்லை.

எனவே நமது இலங்கை ஏறத்தாழ இருபது மில்லியன் மக்கள் வாழும் ஒரு தீவாக அமைந்துள்ளது. இங்கு பல்வேறு மதத்தினை சேர்ந்தவர்கள் வாழ்கின்ற போதிலும் **2012** ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் படி இலங்கையின் பிரதான மதங்களின் அடிப்படையில் **70.19** வீதமான பௌத்தர்களும், **12.61** வீதமான இந்து சமயத்தவரும், **9.71** வீதமான இஸ்லாம் சமயத்தவரும், **7.45** வீதமான கிறிஸ்தவர்களும் வாழ்கின்றனர். உலகம் முழுதும் இன்று சுமார் முப்பத்தெட்டு கோடிப்பேர் பின்பற்றும் பௌத்தம், புத்தம், புத்தர் என்ற சொற்கள் அறிவு, புத்தி என்ற பதங்களையே குறித்து நிற்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஏறக்குறைய **850** மில்லியன் இந்துக்களைக் கொண்டு மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்ற இந்து சமயத்திலும் பஞ்சமா பாதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற வேண்டிய சிறந்த ஒழுக்கலாறுகள் போன்றன பற்றியும் மிகத்தெளிவாக கூறியிருக்கின்றது. அதேபோன்று இஸ்லாம் என்ற சொல்லுக்கு கீழ்படிதல், அடிபணிதல், ஒப்படைத்தல், இறைவனை மட்டுமே வழிபடுதல், கட்டளைகளை நிறைவேற்றுதல் என்று பொருளாகும். இறைவனுக்கு முற்றிலும் கீழ்படிந்து, அவனது ஏவல்களை நிறைவேற்ற வேண்டிய கட்டளைகள் நிரம்ப இருப்பதால் இதற்கு இஸ்லாம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இஸ்லாம் என்ற வேர்ச்சொல்லின் உள்ளார்ந்த பொருள் அமைதி, சாந்தி என்று கூறப்படுகின்றது.

கிறிஸ்தவ சமயத்தின் முதன்மையான பத்துக் கட்டளைகளாக உண்மையான கடவுளை நம்பி ஏற்றிடுக, ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தல் ஆகாது, ஓய்வு நாளை தூயதாகக் கடைப்பிடி, உன் தந்தையும் தாயையும் மதித்து நட, கொலை செய்யாதே, விபச்சாரம் செய்யாதே, பொய்ச்சான்று சொல்லாதே, பிறர் உடமையை விரும்பாதே போன்ற விடயங்களை வலியுறுத்துகின்றது. எனவே இவ்வாறாக பார்க்கின்ற போது மதங்கள் நல்ல விடயங்களையே போதிக்கின்றது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

ஆகவே மனித மான்பு நிறைந்த பண்புகளாக சகிப்புத்தன்மை, இரக்கம், அனுதாபம், நேர்மை, நட்பு, விட்டுக்கொடுத்தல், நம்பிக்கை, அமைதி அடக்கம், சமாதானம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவ்வாறு மன்னிப்பும் ஒரு சிறந்த

மனிதநேய பண்பாகக் காணப்படுகின்றது. அன்பின் பண்புகளில் தலை சிறந்தது மன்னிப்பு ஆகும். மன்னிப்பதால் கண்ணியம் உயருமே தவிர தாழ்வதில்லை. மன்னிப்பதால் மன மகிழ்ச்சி அடையலாம், பகைமையை வெல்லலாம். தீமைகளுக்கு பதிலாக நன்மையையே செய்து எதிரிகளையும் நண்பர்களாக ஆக்கிக் கொள்ளலாம். மன்னிக்கும் சுபாவம் ஒவ்வொருவருக்கும் அவசியமான பண்பாகும். மன்னிக்க முடியாத காரியங்களை இதயத்தில் வைத்திருந்தால் அது கசப்பான உணர்வுகளை மனதில் ஏற்படுத்தும். மன்னிப்பதற்கு முதலில் மனம் வர வேண்டும். உதட்டளவில் "உன்னை நான் மன்னித்து விட்டேன்" என்று கூறிவிட்டு, மனம் முழுவதும் விரோதங்களை அடுக்கி வைத்திருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இந்த நிலை மாற யாரிடமும் பகைமை கொள்ளாது பிறர் தவறிழைத்திருந்தாலும் அவர்களை மன்னித்து, அவர்களின் குற்றங்களை முற்றிலுமாக மறந்து விடவேண்டும். ஒருவருக்கொருவர் மன்னித்துக் கொள்கின்ற போதுதான் பிறரிடையே சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் போன்றவை வளரும். பகை, வெறுப்பு, வஞ்சகம், சண்டை, விரோதம், வைராக்கியம், குரோதம் போன்ற தீய எண்ணங்கள் ஒழியும். நாம் வாழ்கின்ற நாட்களை அற்பமாக வாழாமல் மிக அற்புதமாக பிறரை மன்னித்து வாழலாம். பிறர் செய்த தவறுகளை நினைத்து வருந்தி மன்னிப்புக் கேட்டால், நிச்சயம் அவற்றை மறந்து, மனப்பூர்வமாக மன்னிப்பை வழங்க வேண்டும். மனம் முழுவதும் பிறரின் குற்றங்களை பட்டியல் போட்டு வைத்திருப்பதில் எந்த பயனும் இல்லை.

இவற்றையே மதங்களும் வலியுறுத்துகின்றது. இறைமகன் ஏசு கிறிஸ்து நமக்கு எதிராக குற்றம் செய்தவர்களை மன்னிக்கச் சொல்கிறார். "எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத் 6.12). நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் " ( தண்டிக்கும்) சக்தி பெற்ற நிலையிலும் மன்னிப்பவரே இறைவனிடத்தில் கண்ணியத்திற்குரியவர்" என்று கூறியுள்ளார்.( நூல்: பைஹகி). இராமாயணத்தில் மன்னரை கொள்ள சபதமேற்ற பரசுராமர் ராமனையும் கொள்ள முயன்றார். பரசுராமர் பிறரை தண்டிப்பதில் மகிழ்ச்சி கொண்டவர். ஆனால் இராமபிரான் அவருக்கு மன்னிப்பு வழங்கினார். புத்தபெருமான் மன்னிப்பு வழங்குதலை அறிவாளிகளின் தன்மை

எனக் குறிப்பிடுடுள்ளார். “தனது வரம்பு மீறிய செயலை வரம்பு மீறிய செயலாகப் பார்ப்பவன், தனது வரம்பு மீறிய செயலை ஒப்புக் கொண்டவரை முறையாக மற்றவர் மன்னிக்கின்ற பொழுது இவ் இருவரும் அறிவாளிகள்”( பால-பண்டித்த சுதா-அங்குத்தர நிகாய).

அடுத்தபண்பாக பொறுமை குறித்து நோக்கினால் பொறுமை என்பது ஒரு மனிதனுக்கு முக்கியமான பண்பாகும். பொறுமை கடலினும் பெரிது. பொறுமை இழந்தோமானால் பல்வேறு பாதகமான விளைவுகளை அது ஏற்படுத்தும். பொறுமைக்கு இலக்கணமாய் பூமியைச் சொல்வார்கள். இந்த பூமியை நாம் கால்களால் மிதிக்கின்றோம், எட்டி உதைக்கின்றோம், உமிழ்கின்றோம், ஆனாலும் அது நமக்கு உண்ண உணவளிக்கின்றது, தாகத்திற்கு நீர் தருகின்றது, வாழ இடமும் தருகின்றது. அதேபோன்று நாமும் நம் மனதை பொறுமையின் வழி செலுத்துதல் வேண்டும். பொறுமை என்றால் வெறுமனே ஒரு பிரச்சினையைப் பொறுத்துக் கொள்வதை அது அர்த்தப்படுத்துவது கிடையாது. அதற்குப் பதிலாக பிரச்சினைகளை நம்பிக்கையோடு சகித்திருப்பதைத்தான் அது அர்த்தப்படுத்துகிறது. பொறுமையோடு நடந்து கொள்ளும் ஒருவர் தன்னைப் பற்றி மட்டுமே யோசிக்க மாட்டார், மற்றவர்களுடைய உணர்ச்சிகளையும் கருத்தில் எடுத்துக்கொள்வார். தன்னைக் காயப்படுத்தியவர்களுடைய அல்லது அவமானப்படுத்தியவர்களுடைய உணர்ச்சிகளையும் அவர் மதிப்பார். தனக்கும் தன்னைக் காயப்படுத்தியவர்களுக்கும் இடையில் ஒரு சுமுகமான உறவு நிச்சயம் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு இருப்பார். எனவே அன்பு என்ற குணத்திலிருந்து தான் பொறுமை என்ற குணம் உருவாகின்றது.

பொறுமை, பணிவு ஆகியவற்றைக் கொண்ட மனிதர்களே உண்மையான மனிதர்கள் என புத்தபெருமான் வலியுறுத்தியுள்ளார் “கோபத்தை அன்பினால் அல்லது கோபமற்ற நிலையில் வெற்றி கொள்ளுங்கள்” ( வசனம் 223- தம்மபத). புனித பைபிளில்  “பொறுமை என்ற குணம் கடவுளுடைய சக்தியால் உண்டாகின்ற குணங்களில் ஒன்று” ( கலா 5:22,23). புனித திருக்குர் ஆனில் “ நன்மையும் தீமையும் சமமாக மாட்டா, நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்ட தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது, யாருக்கும் உமக்கிடையே, பகைமை இருந்ததோ, அவர்

உற்ற நண்பரே போல் ஆகிடுவார். பொறுமையாக இருந்தார்களே அவர்கள் தவிர வேறு யாரும் அதை அடையமாட்டார்கள்" (திருக்குர் ஆன் **41:34-35).**

பிறர் மீது கொண்ட நம்பிக்கையும் மனிதநேய பண்பாகக் காணப்படுகின்றது. நம்பிக்கையின் அஸ்திவாரத்தில்தான் இந்த சமூக அமைப்பு சுழன்று கொண்டிருக்கிறது. பெரிய வலைப்பின்னல்களைப் போல ஒவ்வோருவருக்கும் இடையேயும் மெல்லிய நூலிழைப் போல நம்பிக்கை இழையோடிக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொருவருக்கிடையேயும் எந்த பந்தமோ, உறவோ, சம்பந்தமோ இல்லா விட்டாலும் நம்பிக்கை எனும் நூலிழையில் எல்லோரும் பிணைக்கப்பட்டிருக்கிறோம். உதாரணமாக தொழிலாளி மீது முதலாளி வைத்திருக்கின்ற நம்பிக்கைத்தான் அந்த நிறுவனத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதேபோன்று அந்த முதலாளி மீது தொழிலாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைத்தான் அவர்களை உண்மையாக, உற்சாகமாக உழைக்கத் தூண்டுகிறது. கணவன்- மனைவி ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் நம்பிக்கை, பெற்றோர், பிள்ளைகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை எனப் பிறர் மீது வைக்கும் நம்பிக்கையைச் சொல்லிக் கொண்டே போகலாம். நாம் பிறர் மீது கொள்ளும் நம்பிக்கை என்பது உண்மையாக இருக்க வேண்டும். வேறு வழியில்லாமல் நம்புவது என்பது நிலையில்லாதது. அந்த நம்பிக்கை எப்போது வேண்டுமானாலும் அவநம்பிக்கையாக மாறிவிடும். எனவே மனிதரை மனிதர் மதித்து நம்பிக்கை வைத்து நல்வாழ்வு வாழ்வோம்.

நாம் உலகில் வாழ்வது ஒரு முறை, அவ்வாழ்வு பிறருக்கு பயனுள்ளதாக அமைய வேண்டும். மற்றவர்களை மதித்து நடத்தல், ஏழைகளின் துன்பத்தைப் போக்குதல், இளகிய மனமும், இரக்க சுபாவமும், உறுதியான செயல்பாடும் கொண்டிருத்தல் மனிதநேயம் என்று சொல்லலாம். மொத்தத்தில் கடவுளால் மதிக்கப்படும் புண்ணியத்தைக் கொடுக்கின்ற செயல்களைச் செய்தல் ஆகும். எந்த மனிதனிடம் மனிதநேயம் அதிகமாக இருக்கிறதோ அவன் உயர்ந்து நிற்கின்றான். கடவுளின் கருணையைப் பெறுகின்றான். ஒரு மனிதன் அறிவாளியாக இருக்கலாம், ஆளுமை உடையவனாக இருக்கலாம், அதிகாரம் படைத்தவனாக இருக்கலாம், எல்லாம் இருந்தும் அவனிடம் மனிதநேயம் இல்லாவிட்டால்

தான்நினைத்த எதையும் அவனால் சாதிக்க இயலாது. பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதநேய மாண்புடன் வாழ்ந்த புனிதர்கள் நிறைந்த பூமி நமது பூமி. அத்தகைய மனிதநேயப் பண்புகளாக அவர்கள் கூறியவை உயர்வான ஒழுக்கம், உன்னதமான பண்பாடு, அவலக்குரல் கேட்டால் துடித்து எழும் மனிதநேயம், ஆன்ம நேயம், அன்பு, கருணை, இரக்கம், பிறருக்கு துன்பம் அளிக்காமல் இருத்தல், சகிப்புத்தன்மை,சக மனிதர்களை மதித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நாமும் இத்தகைய பண்புகளைக் கடைப்பிடித்து மனிதனாய் இருப்போம், மனிதனை நேசிப்போம், மனிதத்தைப் போதிப்போம்.

தன்னைத் தாக்கும் பகைவர்களுக்கு கூட இம்சை செய்யாதிருப்பதை தனது போராட்ட வழியாக நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டார் மாமனிதர் மகாத்மா காந்தி. இந்த உலகில் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால், கண்களுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பு செலுத்த இயலும் என்கின்றார் அன்புக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த அன்னை தெரசா. இவற்றையே நமது மதங்களும் வலியுறுத்துகிறது. ஆகவே சமயங்கள் என்பன மனிதனை நல்வழிப்படுத்துவதற்கும், நெறிப்படுத்துவதற்கான ஒரு ஊடகமாக செயற்படுகின்றது. சமய நம்பிக்கை என்பது இந்த உலகத்தை சகோதரத்துவம், எனும் வழிகளில் இட்டுச்செல்கின்றது. வேறு வேறு மதங்கள் என்று நாம் பிரிந்து வாழாமல் அனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையாய் வாழ்வோம். ஒவ்வொருவருக்கும் மதங்கள் மற்றும் நம்பிக்கைகளைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம், உரிமை என்பன காணப்படுகின்றன. அதனால் பிற சமயத்தை மதித்து, மனிதநேயத்தோடு வாழ்வோம். எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்ட ஒரு விடயமாக உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், மனிதநேயம் காத்தல் என்பன காணப்படுகின்றது.

**“பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**

**மண்புக்கு மாய்வது மன்”**